1984 மார்ச் 28]

திரு. இல. புலராமன் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் பூங்குளத்தில் மட்டுமல்லாமல் பல பின்தங்கிய பகுதிகளில் படிப்பறிவு இல்லாத மக்களுக்கு கல்வி தரவேண்டும். அதிலும் குறிப்பாக பெண்களுக்குக் கல்வி தரவேண்டும் என்ற உணர்வோடு—ஏனென்றால் பெண்களால் அதிக தூரத்திற்குச் சென்று படிக்க முடியாது—பின்தங்கிய பகுதிகளில் அந்தந்த இடங்களில் தகுதிக்கேற்ப இந்த ஆண்டாவது பள்ளிகளைத் திறக்க அனுமதி வழங்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அந்தக் காரணங்கள் எல்லாம் அரசு ஏற்கெனவே உணர்ந்துதான் செயல்படுகின்றது. ஆனால் கோரிக்கை அந்தந்த இடங்களிலிருந்து வர வேண்டும். அப்படி வருகின்றபோது அந்த கோரிக்கைகளை வைத்து இந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அந்தக் குழுவிடம் நாம் சொல்லி இருக்கிறோம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா ஆய்வுப் பிரிவு.

486 (*வினா எண் 21735—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேரறிஞர் அண்ணா ஆய்வுப் பிரிவுப் பணி துவங்கிவிட்டதா ?

(ஆ) அதற்கான செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) துவக்கப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இதற்காக ஆண்டொன்றிற்கு சுமார் ரூ. 1,11,000 (ரூபாய் ஒரு இலட்சத்து, பதினோராயிரம் மட்டும்) செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சத்துச் சில்லரை ரூபாய் செலவாகும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிதியை அரசாங்கம் ஏற்கின்றதா அல்லது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கின்றதா ? எத்தனை ஆண்டுகளுக்குள் இந்தப் பணி முடிவுறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதற்கான நிதியை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அறக்கட்டளை தந்திருக்கின்றது. அவர்கள் தந்த தொகை 21 இலட்சம் ரூபாய். அதிலே இருந்து கிடைக்கின்ற வட்டியை வைத்துக் கொண்டுதான் நாம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம்.

அதிலே கிடைக்கின்ற வட்டி மூலமாக ஒரு பேராசிரியர், ஒரு ரீடர், இரண்டு விரிவுரையாளர்கள் மற்றும் சில ஆய்வு மாணவர்கள் கொண்ட இந்த ஆய்வுப் பிரிவு செயல்படும்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூல்களை ஆராய்வதற்காக சென்னை பல்கலைக் கழகத்திலே இந்த அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதுபோல் தமிழகத்திலுள்ள மற்ற பல்கலைக் கழகங்களிலும் இப்படிப்பட்ட திட்டத்தை அமைக்க அரசு ஏதேனும் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது அரசு எடுத்த முயற்சி அல்ல. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை சார்பாகச் செய்யப்பட்ட ஒன்று. அதை பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்த இருக்கின்றது. இதுபோன்ற முயற்சிகளை அரசு தன்னுடைய நிதியிலிருந்து செய்யவில்லை.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, திசைமாறிப் போன திராவிட இன மக்களின் வழிகாட்டியாக, மாலுமியாக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தந்த நிதியிலிருந்து ஆய்வு செய்வது என்பது பாராட்டுக்குரிய ஒன்று என்று சொன்னாலும் ஒரு கணிசமான தொகையை ஒதுக்கி பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு காலப் பெட்டகங்கள், கல்வெட்டுக்கள் போன்றவற்றை அமைக்கின்ற சூழ்நிலையினை ஏற்படுத்தி, வருகின்ற மக்கள் அதைப் பாதுகாக்கக்கூடிய அளவிலும், அவைகளை ஞாபகப்படுத்தக்கூடிய நிலையிலும் பல்கலைக் கழகம் ஆலோசனை செய்து மேற்கொண்டு அரசின் துணையோடு முடிவுகளை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தந்து இருக்கின்ற 21 இலட்சம் ரூபாய் நிதியை வைத்துக் கொண்டு ஒரு பிரிவை ஆரம்பிக்க இருக்கிறார்கள். அதிலே பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்துக்கள், சிந்தனைகள்

ஆகியவற்றைப் பற்றி அவர்கள் ஆய்வு செய்வார்கள். இதுதான் இந்தப் பல்கலைக்கழகத்திலே செயல்பட இருக்கின்ற பிரிவினுடைய வேலையாகும். இதற்கு அப்பாற்பட்டு அவர்கள் வேறு வேலையை எடுத்துக் கொள்ளமாட்டார்கள்.

(முற்பகல் 9-10)

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அனைத்துத் துறைகளிலும் சிறந்தவராக விளங்கினார்கள். அவருடைய பெயரால் என்ன என்ன சப்ஜெக்ட்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள முடிவு எடுக்கப் பட்டுள்ளது ? அல்லது, என்ன என்ன பொருள்களுக்கு முக்கியத் துவம் கொடுக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களையே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அவர் சொன்ன அத்தனை கருத் துக்களையும், நாட்டுக்காக அவர் பேசிவிட்டுப் போன அத்தனைக் கருத்துகளையும், அவர் எழுதிய எழுத்துக்களையும் எல்லாம் வைத்துத்தான் அவர்கள் ஆராய இருக்கிறார்கள். ஆகவே, எதையும் விட்டுவிட்டு செய்வதாக இல்லை. எல்லாவற்றையும் வைத்துதான் செய்ய இருக்கிறார்கள்.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிப் பணிகள் முடிந்ததற்குப் பிறகு அதன் முழுப் பலனை வருங்கால மாணவர்கள் முழுமையாக பயன்பெறும் வகையில் கல்லூரிகளில் பாடப் புத்தகங்களாக வைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்ந்து நடைபெறுகிற ஒன்று. இவைகள் மூலம் பலன் பெறுகின்றவர்கள் பலன் பெற்று வருவார்கள். மாணவர்களுக்கென்று வருகின்றபொழுது அது தனியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய முயற்சி.

சேடப்பட்டி ஒன்றியத்திற்குத் தனியாக நிதி ஒதுக்கித் தரக்கோரி வந்துள்ள விண்ணப்பம்.

487 (*வினா எண் 19854)—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—